ஸ்ரீ முஷ்ணம் (4200)

ஸ்ரீ அம்புஜவல்லி சமேத
ஸ்ரீ பூவராகஸ்வாமி
திவ்ய மாசிமக வைபவம்.

10884. (1968)

ஸ்ரீ

# ஸ்ரீமுஷ்ணம்
# ஸ்ரீ அம்புஜவல்லி சமேத
# ஸ்ரீ பூவராக சுவாமி
# கிள்ளை மாசி மக
# வைபவம்



ஆசிரியர்:

**கே. இராமச்சந்திர ராவ்,**

(கிள்ளை உப்பு வெங்கட்ராயர் மாசி மகம்
வகையறு தர்மம்) முறை அறங்காவலர்

and

ராஜ்ய விருது பெற்ற தலைமையாசிரியர்
ப. கூ. ம. உயர்துவக்கப்பள்ளி, எருக்கூர்
(கொள்ளிடம் பஞ்சாயத்து யூனியன்)
[தஞ்சை மாவட்டம்.]

முதற்பதிப்பு: பிப்ரவரி—1968

பதிப்புரிமை:
ஆசிரியருக்கு

முருகுந்தன் அச்சகம்
மேலவீதி, சிதம்பரம்.

ஸ்ரீ:

# கடவுள் வாழ்த்து.

ஸ்ரீ சத்ய ப்ரோமோத தீர்த்த பகவத் பாத குருவன்
தர்க்தக

ஸ்ரீ சீதாராம ப்ரியதாம் ஸ்ரீ பூவராஹாய நம:

நமஸ்வேத வராஹாய ஸ்ரீமுஷ்ண நிலையாச
ஜில்ஜிகா வண வாஸாய ஸ்ரீமுஷ்ணப் பிரம்மணே நம:
(வராக புராணம்)

"சூகர ரூபக தானவ சத்ரோ பூமி விதாரகயக்ஞவராஹா"
(ஸ்ரீமத்வாசாசாரியார் துவாதச
ஸ்தோத்திரம்)

கரவ கடியாம் யாலிட்டனு ஸ்ரீ பூவராகனு
(புரந்தர தாஸர்)

கோலமலர்ப் பாவைக்கு அன்பாகியவென் அன்பேயோ
நீலவரை யிரண்டு பிறை கவ்வி நிமிர்ந் ததொப்ப
கோல வராக மொன்றாய் நிலங் கோட்டிடைக் கொண்ட
எந்தாய்

நீலக்கடல் கடைந்தாய்! உன்னைப்
பெற்றி னிப்போக்குவனோ
(நம்மாழ்வார்)

# முன்னுரை

அஷ்ட ஸ்வயம் வ்யக்த ஸ்தலங்களுள் ஒன்ருகிய ஸ்ரீமுஷ்ணம் அல்லது திருமுட்டம் என்னும் மஹா திவ்ய க்ஷேத்திரம் சிதம்பரத்தில் இருந்து வடமேற்கில் சுமார் 28 மைல் தூரத்தில் உள்ளது. இத்தலம் ஓர் முக்கியமான ஸ்தலமாயிருந்தும் இதன் மகிமை இன்னும் பெரும்பாலான யாத்ரீகர்களுக்கு தெரியவில்லை. சிதம்பரத்தில் இருந்தும், விருத்தாசலத்தில் இருந்தும் ஸ்ரீமுஷ்ணத்திற்கு பஸ் போக்குவரத்து வசதி உள்ளது. இதன் முக்கியத்துவத்தைப் பற்றி பாமர மக்கள் எளிதில் தெரிந்துக் கொள்ளும்படி இதுகாறும் புத்தக வாயிலாக ஒன்றும் எடுத்துக் கூறப்பட்டதாகத் புலப்படவில்லை. ஆனால் மஹா மஹோபத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர். உ.வே. சாமிநாதய்யர், பிரபல சரித்திரப் பேராசிரியரான புரொபஸர். வீ. ரங்காசாரியார், பிரபல எழுத்தாளராகிய பி.ஸ்ரீ முதலியோரால் இத் தலத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு அன்னார்களுக்குள்ள சில அசர்ந்தப்பங்களால் அவை பூர்த்தியாய் முடிவு பெருமல் நின்று போய் விட்டது. ஆனல் சமீபத்தில் காலஞ்சென்ற உயர்திரு. பாஸ்கரத் தொண்டமான் அவர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டு சிலஆண்டுகளுக்கு முன்னல் கல்கியில் வந்துள்ளது.

இக் காரணங்கருதியே "ஆசைப்பற்றி அறையலுற்றேன்" என்பதற்கிணங்க ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ பூவராகசுவாமி கிள்ளை மாசி மக வைபவம் என்னும் இந் நூலை இயற்றி அதை ஸ்ரீ அம்புஜவல்லி சமேதரான ஸ்ரீ பூவராகப் பெருமானின் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன். இந் நூலைப் படிக்கும் அனைவரும் ஸ்ரீ பூவராகப் பெருமானின் சகல கிருபாகடாக்ஷத்தையும் பெற்று உய்வார்களாக.

# மதிப்புரை

ஸ்ரீமந் மஹா கணபதயே நம:
ஸ்ரீ சத்ய த்யான தீர்த்த பகவத்பாத குருவந் தர்க்கத
ஸ்ரீ சீதாராம ப்ரியதாம் ஸ்ரீ பூவராஹாய நம:

''ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ பூவராகஸ்வாமி கிள்ளை மாசி மக வைபவம்'' என்னும் பகவத் விஷயமான நூலை பார்வையிட்டேன். இப் புத்தகம் அச்சிற்கு வருவதற்கு முன்னால் பலபுராணங்களிலிருந்து முக்கியமானபிரமாணங்களைக் கொண்டும், ஸ்ரீஸ்ரீஉத்திராதி மடம் ஸ்ரீஸ்ரீசுவாமிகள் இவ்வூர் விஜயத்தில் அபிப்பிராயம் தெரிவித்த புராதன விஷயங்களைக் கொண்டும் என்னால் நன்கு பரிசோதிக்கப் பட்ட பின்னர் இச் சிறு நூல் பிரசுரிக்க அனுமதிக்கப் பட்டுள்ளது.

கிள்ளை உப்பு வெங்கட்ராயர் சந்ததியார்களுள் ஒருவரான இப் புத்தக ஆசிரியர் தாம் வயதில் சிறியவராக இருந்த போதிலும், முதிர்ந்த உலக அனுபவமும், ஆழ்ந்த ஆராய்ச்சியுணர்ச்சியும் தெய்வ பக்தியும், பொது ஜன சேவை உணர்ச்சியும் உடையவராய் இருப்பது அறிஞர் பலரால் பாராட்டுதற்குரியது என்பது மிகையாகாது.

இப் புத்தக ஆசிரியரை கன தனவான்கள் ஆதரித்து மேலும் மேலும் தளரா ஊக்கத்தையும் அளித்து இது போன்ற சேவைகளில் இன்னும் ஈடுபட்டு உழைக்க அவருக்கு சர்வ மங்களத்தையும் உண்டாக்குமாறு ஸ்ரீ அம்புஜவல்லி மேதரான ஸ்ரீ எக்ஞய வராகரைப் பிரார்த்திக்கிறேன்.

— சுபமஸ்து —

(Sd) பண்டித புராணம்
**S. K. வெங்கட்ரமணாசார் பாகவதர்**
ஸ்தல புராணம், ஸ்ரீமுஷ்ணம் 29—12—1944.

பெ. ம. முத்துவேல்,
பி. ஏ., பி. எல்.
உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறை.

கடலூர்-1.
20—1—68.

# மதிப்புரை.

"ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீபூவராகசுவாமி கிள்ளை மாசி மக வைபவம்" என்று கட்டளை முறை அறங்காவலர், திரு கே. இராமச்சந்திர ராவ் அவர்களால் வெளியிடப் பட்டுள்ள புத்தகத்தைப் படித்தேன். மிகவும் அழகான முறையில் தெளிவாய், விவரமாய் புராணம், சரித்திர சம்பந்தமான விஷயங்களைக் கொண்டதாய் அமைந் துள்ளது. ஸ்ரீ மு ஷ் ண ம் · ஸ்ரீ பூவராக ஸ்வாமியின் அவதாரம், ஸ்ரீமுஷ்ணம் க்ஷேத்திரத்தின் பெருமை கிள்ளைக்கு விஜயம் செய்தது, கடல் நீராட வந்தது, இதற்காக ஸ்ரீ உப்பு வெங்கட்ட ராவ் அவர்களால் ஏற் படுத்தப்பட்ட கட்டளை முதலிய விவரங்கள் விளக்கமாய் கொடுக்கப்பட்டுள்ளது. கிள்ளையில் மாசி மகத்திற்கு ஸ்ரீ பூவராக ஸ்வாமி வரும்போது இங்கு இந்து முஸ்லீம் ஒற்றுமை நிலவி வருவதாய்த் தெரிகிறது.

இப்புத்தகத்தை சகலவிதமான குறிப்புகளைச் சேகரித்தும், மிகுந்த பிரயாசையுடனும், சிரமத்துடனும் தற்கால முறை அறங்காவலர் திரு. கே ராமச்சந்திர ராவ் அவர்கள் வெளியிட்டுள்ளது போற்றத்தக்கதாகும். இவரது முயற்சி மிகவும் பயனுடையதாய் அமைந் துள்ளது இதுபோல் ஒவ்வொரு அறங்காவலரும் ஆலய நன்மைக்குப் பாடுபடுவாரேயாகில், ஆலயங்கள் முன்னேற்றம் அடைவதுடன் இறைவன் அருள் கிட்டும். கட்டளையின் நோக்கத்தைப் பொதுமக்களுக்கு தெரியும் படி செய்வது வரவேற்கத் தக்கதாகும்.

இப் புத்தகம் பொது மக்களுக்கு பயன் உள்ளதாய் அமைந்திருக்கிறது.

பெ. ம. முத்துவேல்.
20—1—68.

ஸ்ரீ பூவராகன் துணை.

# மதிப்புரை.

ஸ்ரீய: பதியான ஸர்வேஸ்வரன் கட்டிப்பொன் போலேயிருந்து நித்ய ஸூரிகளோடு உடனிருக்கும் நித்ய விபூதியும், அவன் பணிப் பொன்போலப் பளிச்சிடும் லீலா விபூதியும் பாகவதனுபவத்துக்கு உரியவாமா செய்யும் புருஷகார பூதையாகிய பூமிப்பிராட்டி உயிர்களின் முன்னேற்றங் கருதி அடைந்த இன்னல்கள் பல. தாயாகி நின்ற தத்துவ பூதையானமையின் ஸ்ரீ பிராட்டி போன்றே பூப்பிராட்டியும் நம் போன்றோரைக் காக்க எடுத்த முயற்சிகள் பல.

ஸ்ரீ க்ருஷ்ண ஸம்ஸ்லேஷத்தில் திளைக்கும் ஆய்ப்பாடிச் சிறுமியாகத் தம்மை ஆக்கிக்கொண்டு, ஸ்ரீ பெரியாழ்வாரின் திருமகளாகத் தம்மைத் தோற்றுவித்துக் கொண்டு சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாக நின்று பாவை பொழிந்த வைபவம் உலகப் பிரசித்தம். ஸ்ரீவாத்ஸல்ய குண மகிமையால் கட்டவும் அடிக்கவும் படியான எளிமையுடையோனைத் தம்மை ஆக்கிக்கொண்ட ஸ்ரீ கிருஷ்ண பகவானின் ஸ்ரீக்ருஷ்ண ஸம்ஸ்லேஷத்தை பக்தியால் அனுபவிக்கலாம் என்பதே திருப்பாவை விஷயம்.

ஸ்ரீ புருஷகார பூதையான பூமிப்பிராட்டி மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத முத்துடைத் தாமம்நிறைத்த பந்தர்க்கீழ் மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து கைத்தலம் பற்றிய நிலைமையில் விளைந்த ஸ்ரீ க்ருஷ்ண ஸம்ஸ

லேஷத்தை அனைத்துயிர்களும் பெறும் முறை பக்தி ஒன்றே என்பதை உணர்த்த எழுந்த அவதார வைபவமே ஸ்ரீ வராகாவதார வைபவம்.

ஸ்ரீ பக்தையான பூப்பிராட்டி ஹிரண்யாட்சன் கையால் துன்புற்றுக் கடலில் அமிழ்ந்தபோது அனந்த கல்யாண குண சஹிதனான நம்பெருமான் ஸ்ரீ வராகவதார வைபவத்தால் அன்னையை மீட்டு வரும்போது தனக்கென்று என்றுமே கவலைப்படாது தன் உயிர்களுக்காகவே கவலைப்படும் பேரருளால் ஸ்வாமீ! என் மக்கள் தங்கள் ஸ்வானுபவத்தை - ஸ்ரீ வாத்ஸல்ய குண விசேஷத்தை அனுபவிக்க உரிய எளிய வழியாது? என்று கேட்க ஸ்ரீ வராகாவதார மூர்த்தியாக நின்ற ஸ்ரீமந் நாராயணன் பிராட்டியின் திருச்செவியில் அருள் கூர்ந்து ஓதிய பக்தி மார்க்க ரஹஸ்யத்தைப் பிராட்டி உயிர்களுக்குஉணர்த்த எடுத்த அவதாரமே ஸ்ரீஆண்டாள் வைபவம். பக்தி மார்க்கமே பாவைப்பாட்டுக்கள் என்பதே ஸ்ரீகிரந்த தாற்பரியம்.

ஸ்ரீ பூவராக சுவாமி கிள்ளை மாசி மக வைபவம் என்பதை வியாஜமாகக்கொண்டு இந்நூலின் ஆசிரியர் கிள்ளை உப்பு வெங்கட்ராயர் மாசி மகம் வகையறா தர்மம் முறை அறங்காவலர், கே. இராமச்சந்திர ராவ் அவர்கள் ஸ்ரீ பூவராக சுவாமி விஷயமான வைபவங்கள் எல்லாவற்றையும் அடக்கிக்கொடுத்து விட்டார்கள். பெரிய விஷயங்களைச் சிறிய இடத்தில் விளங்க வைப்பது மிகக் கடினம் திருக்குறள் அத்தகைய பெருமையைப் பெற்றது இந்நூலாசிரியர் மிக அநாயசமாக இக்காரியத்தைச் செய்துள்ளார்.

இந் நூலாசிரியர் நம்மைச் சிந்திக்க வைக்கும் செய்திகள் மூன்று. 1) மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவைகளின் உண்மைப் பொருள் அறிந்து வழிபடவேண்டும்.

ஒற்றுமை ஆகியவைகள் பக்தி மார்க்கத்தால் விளையும் பயன் எனப் படம் பிடித்துக்காட்டுகின்றார். 3) திரு விழாக்கள் அவதார வைபவங்களை நாம் ஏனோ தானோ என்று நடத்தாமல் தாற்பரியமுணர்ந்து செயல்பட வேண்டும்.

ஸ்ரீ பூவராகப் பெருமாள் உற்சவம் முடிந்ததும் கோயிலுக்குள் போகாமல் கடலாட்டுக்குச் செல்லும் காட்சியில் நம்மை லயிக்க வைத்து அப்படியே அழைத்துச்சென்று ஸ்ரீமுஷ்ணம் திருக்கோயிலையே நம் கண்முன் நிறுத்திவிடுகிறார்.

தடைபடாது எழுதும் எழுத்து நடையும், மரபுமுறை மாறாது அமைந்த சொன்னடையும், பாகுபடுத்திக் கொண்ட பொருள்நடையும் இக்கால இளைஞர் உள்ளங்களை ஈர்க்கும் நிலையை உண்டாக்கியுள்ளன. இவ்வகையில் இந்நூலாசிரியர் ஒரு வித்தகராக விளங்குகிறார்.

சமய நம்பிக்கை உள்ளவர்களுக்கு மட்டுமேயன்றி மற்றையோர்க்கும் இந்நூல் ஒரு கலைக்களஞ்சியமாக விளங்குகின்றது என்னலாம்.

இங்ஙனம்,

**R. வரதாச்சாரி.**

# நன்றியுரை

இப்புத்தக சிறப்பு மலருக்கு பேரன்புபூண்டு தமதரிய மதிப்புரைகளையும் வரலாறுகளையும் அளித்த பண்டித புராணம், ஸ்ரீ முஷ்ணம் திரு. எஸ்.கே. வெங்கட் ரமணாசார் பாகவதர், தென்னாற்காடு மாவட்டம் இந்து அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் உயர்திரு. பெ. ம. முத்துவேல், பி. ஏ., பி. எல். உப்பு வெங்கட் ராயருக்கு மானியம் கொடுத்த முஸ்லீம் தர்மவானின் வம்சத்தினரும், கிள்ளை தர்கா டிரஸ்டியுமான ஜனாப். சி. எஸ். பீரான், **Dr.** ஆர். வரதாச்சாரி, *B.Sc., (Hons) M.Sc., Ph.D., Reader in Physical Chemistry, Department of Technology, Annamalai University* ஆகிய இவர்களுக்கும் என் நன்றி பலகாலும் உரித்தாகுக.

இதை அச்சிட்டுத்தந்த சிதம்பரம் முகுந்தன் அச்சக உரிமையாளர் திரு. என். ரகுபதி அவர்களுக்கும், இதை எழுதி வெளியிட உற்சாக மூட்டிய கிள்ளை உப்பு வெங்கட்ராயர் மாசிமகம் வகையரு தர்மம், சூப்பிரண் டெண்டு, திரு. கே. நடராஜன் அவர்களுக்கும், இன்னும் கிள்ளையில் உள்ள அன்பர்கள், பொதுமக்கள் அனைவருக் கும் என் நன்றி உரித்தாகுக.

இதைக் கண்ணுறும் அன்பர்கள் இதன் ஆசிரியரு க்கு ஆதரவையும் அன்பையும், தந்தருள இம்மாதிரியான பணியில் மேலும் மேலும் ஈடுபட்டு தொண்டாற்ற உற்சாக மளிக்குமாறும் பணிவன்புடன் விஞ்ஞாபித்துக் கொள்ளு கின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்பிற்குரிய,
**கே. இராமச்சந்திர ராவ்,**
முறை அறங்காவலர்,
(கிள்ளை உப்பு வெங்கட்ராயர்
மாசிமகம் வகையரு தர்மம்)

கிள்ளை
14—2—'68

ஸ்ரீ பூவராகன் துணை.

# ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ பூவராக சுவாமி கிள்ளை மாசி மக வைபவம்

இப் பூவுலகில் எம்பெருமான் எழுந்தருளி இருக்கும் ஸ்தலங்கள் யாவும் மூர்த்தி மகிமையும், ஸ்தல மகிமையும் தீர்த்த மகிமையும் பெற்றிருக்கின்றன. அவைகள் அனைத்தையும் எம்பெருமானாகவே எண்ண வேண்டும். அவைகளை முறையே வணங்குவோர் உண்மை விளங்கப் பெற்று முக்தி அடைவர்.

பகவத் சொரூபங்களாகிய ஸ்தலங்கள் அளவிலா தன. அவற்றுள் ஸ்வயம், வ்யக்தம் ஸ்தலங்களே விசேஷம்

"சீ முட்டமாம் பெரிய வரங்கம் வேங்கடம் அகோ
பிலமாம் சீர்சா
லா முட்டமெனும் பதரி சாளக் கிராம மோட மலைக்
கின்பா
மா முட்ட மெனும் புருடோத்தமம் தோதாத்திரி அட்ட
வருக்க மீது
நா முட்டச் சுயம்பு ரைத் தோர் கோவையிட்டே
நவில்வர் மாதே"

"ஆத்யம் ஸ்வயம் வ்யக்த மிதம் விமானம் ரெங்க ஸஞ்கிகம்
ஸ்ரீமுஷ்ணம்ச வேங்கடாத்ரிம்ச ஸாளக்கிராவுஞ்ச
நைமிஷம்
தோதாத்ரிம் புஷ்கரம் சைவ நர நாராயணச்ரமம்
அஷ்டெளமே மூர்த்தி பஸ்ஸந்தி ஸ்வயம் வ்யக்தா
மஹீ தலே"

என்றபடி ஸ்ரீரங்கம், திருப்பதி, நாங்குனேரி, (திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது.) சாளக் கிராமம், நரநாராயணாஸ்ரமம், புஷ்கரம், நைமிஷம், ஸ்ரீமுஷ்ணம் என்னும் எட்டு ஸ்தலங்களும் ஸ்வயம், வ்யக்த ஸ்தலங் களாகும். (எவ்வாறு) சைவர்களால் காஞ்சி, திரு வானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் என்னும் ஐந்து சிவஸ்தலங்களும் பஞ்ச பூதலிங்கங்கள் என்று விசேஷமாகச் சொல்லப்படுகிறதோ அம்மாதிரியே வைணவர்களால் மேலே சொல்லப்பட்ட எட்டு ஸ்தலங் களும் விசேஷ மகிமை உள்ளதாக சொல்லப்படுகிறது.

இவைகளுள் நரநாராயணாஸ்ரமம், நைமிஷம் என்னும் இரண்டு ஸ்தல மான்மியமும் காடு விசேஷமும், புஷ்கர க்ஷேத்திரம் தீர்த்த மான்மியமும், ஸ்ரீரங்கம் விமான விசேஷமும், ஸ்ரீமுஷ்ணம் முதலியன மூர்த்தி மான்மியமும் கொண்டு விளங்கும்.

ஆகவே புண்ணிய ஸ்தலங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும் பகவான் ப்ரஸன்னமான ஒவ்வொரு கால விசேஷத்தால் பிரார்த்திக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன வென்று தெரிகிறது. "ஞானிகள் வ்யவஹாரம் லோகோபகாரம்" என்றபடி தாம் அரிதில் அடைந்த பெரிய பேற்றை யாவரும்

எளிதில் அடைந்து உய்யவேண்டும் என்னும் கருணை நோக்கத்துடன் எம்பெருமானைப் பார்த்து "இவ்விடத்தில் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்து வருகின்ற மெய்யடியார்க்குத் தேவரீர் அருள் புரிய வேண்டும்" எனப் பலவாறு துதித்து வணங்கி ஆதிகாலத்தில் பக்தர்கள் வேண்ட வேண்டிய ஆங்கு ஈயும் பெருமான் அதற்குடன்பட்டு வீற்றிருந்தருளுகிற சிரேயஸ்ஸாதனமான, ஸ்தலங்களே இவையென்பது திண்ணம்.

இவைகளுள் ஒன்றாக விளங்கும் ஸ்ரீமுஷ்ணம் அல்லது திருமுட்டம் (சிதம்பரம் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து சுமார் 28 மைல் தூரத்தில் உள்ளது) என்றும் ஸ்தலத்தைப் பற்றி ஆராய்வோம்.

"நமஸ்வேத வராஹாய
ஸ்ரீமுஷ்ண நிலயாயச
ஜில்லிகா வனவாஸாய
ஸ்ரீமுஷ்ண ப்ரம்மணே நம:"

என்பதற்கிணங்க 28வது கிருதயுகத்தில் ஹிரண்யாக்ஷனை சம்ஹரித்து, மஹாவிஷ்ணு வாணவர் ஸ்ரீ பூஸமேதராக ஸ்வேதவராக ரூபமெடுத்து பக்தகோடிகளை பரிபாலிப்பதின் நிமித்தம் பரம பாவனமாகிய விருக்ஷராஜா (நித்ய புஷ்கரணி) தீர்த்தமும் உள்ள ஸ்ரீமுஷ்ணம் என்னும் இத் திவ்ய க்ஷேத்திரத்தில் அவதரித்தார் என்று புராணம் கூறுகிறது. இத்திவ்ய க்ஷேத்திரத்தில் "நித்தீஸ்வரர்" என்ற ஓர் பிரபல சிவாலயமும் இருக்கிறது.

## புராணத்திலுள்ள விசேஷங்கள்

"ஆதௌ கோலதனும் ஸுசிம் கிலவஹந் ஹத்வா
ஹிரண்யாஸு
தம்ஷ்க்ரேண வஸுந்துர முதவஹந் ஸம்ஸ்தாப்ய
சேஷோபரி"

ஹிரண்யாக்ஷன் என்னும் அஸுரனால் பூமியானது பாயாகச் சுருட்டப்பட்டுப் பாதாள உலகத்தில் கொண்டு போய் வைக்கப்பட்டபடியால் பூவுலகத்திலுள்ளவர்கள் தங்கள் ஜபதபங்களை செய்யவும் தெய்வ வழிபாட்டைச் செய்யவும் முடியாமல் போய்விட்டது. அதனால் மண்ணுலகத்தினரும் விண்ணுலகத்தினரும் மகாவிஷ்ணுவிடம் போய் முறையிட்டுக் கொண்டனர். அப்பொழுது மகா விஷ்ணுவானவர் ஓர் வெள்ளைப் பன்றியின் உருவம் பூண்டு பாதாள உலகத்திற்குச் சென்று அவ்வரக்கனைக் கொன்று பூமியை மீட்டுக்கொண்டு வந்தார். பன்றி ரூபங் கொண்டு பூமியைக் கொண்டுவந்ததால் 'பூவராகர்' என்ற திருநாமமிடப்பட்டது. பூ என்றால் பூமி, வராகம் என்றால் பன்றி பூமியைப் பாதாள உலகத்தில் இருந்து கொண்டு வந்த வராக ரூபத்தோடு நின்ற இடத்திற்குத் தான் ஸ்ரீமுஷ்ணம் என்று பெயர் அல்லது ஹிரண்யாக்ஷனுடைய வாழ்க்கையின் முடிவு பெற்ற இடம் என்ற மற்றொரு பெயரும் இத் தலத்திற்கு உண்டு. "பூலோக மாத்யம் ஸ்ரீமுஷ்ணம்" என்பதாகத் தானே புராணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்குத் தாத்பரியம் ஹிரண்யாக்ஷனை வதம் செய்து பூமியை ஆதிசேஷனுடைய சிரஸில் ஸ்தாபனம் பண்ணினதால் இத்தலத்திற்கு பூலோக வைகுண்டம் என்ற பெயரும் உண்டு.

இத் தலத்தை விஷ்ணு வாயுரூபி என்றும் சொல்லப் படுகிறது. 'ஜில்லிகா வனம்' என்ற மற்றொரு பெயரும் இத் தலத்திற்கு உண்டு. இது ஹிரண்யாக்ஷன் மனைவியான ஜில்லிகை என்னும் அரக்கிக்கு உரியதாம். இவள் குமாரன் பெயர் தண்டகாசுரன். இவனையும் பகவான் வராக ரூபம் எடுத்த பொழுது சம்ஹரித்ததாக புராணங்களின் மூலம் தெரிகிறது.

இத் தலத்திற்கு அருகே சுமார் 11 மைல் தூரத்தில் விருத்தாசலம் உள்ளது. இங்குதான் சுந்தரர்க்கு திருவாலூர்க் கமலாலயத்தில் மூழ்கி தீர்த்தமாடினல் பரவையாருக்கு கொடுத்த பவுன் கிடைக்கும் என்று கூறி அருள் புரிந்த பழமலை நாதர் கோயில் உள்ளது. இத்தல மும் மிகவும் மகிமை உள்ளது. "கயா, ப்ரயாகா, காசிப்ய: சதகுணதிகம்" என்றபடி கயா க்ஷேத்திரம், பிரயாகை க்ஷேத்திரம், விருத்தகாசி இவை மூன்றும் காசி க்ஷேத் திரத்தைவிட 100 மடங்கு அதிகம் மகிமையுள்ளது. என்று ப்ரம்ம, நாரதீய புராணங்களில் கூறுவதாக சொல்லப்படுகிறது.

## பஞ்ச வராஹங்கள்:-

(1) ஸ்வேத வராகன் (2) நீலவராகன் (3) கோல வராகன் (4) எஞ்ஞவராகன் (5) பூவராகன் என ஐந்து வராகங்கள் உள்ளன என்று புராண ஆசிரியர்கள் கூறுகின்றனர். இவற்றுள் (2) நீலவராகன் (4) எஞ்ஞ வராகன் இந்த இரண்டையும் மட்டில் ஈண்டு விவரமாக விவரிக்கப்பட்டுள்ளது.

## நீல வராகன்:-

*இத் தலத்தில் (ஸ்ரீமுஷ்ண க்ஷேத்திரத்தில்) இப் போது மூல மூர்த்தியாய் உள்ளவர். வராக ரூபம், முகம் வராக ரூபம். உடல் மனித சொருபம். இம் மூல விக்கிரகம் சாலிக் கிராம சிலையால் ஆனது. இம் மூல மூர்த்திக்கு 4 காலமும் அபிஷேக அலங்கார நிவேதனம் உண்டு.

*ஸ்படிகக் கல்லாலான மூல விக்கிரகம் ஒன்று இருந்ததாகவும் அது ஒரு காலத்தில் மைசூர் அரசரான

*Vide: South Arcot Dt. Gazetter: Part I P-290-91

முதலாம் கிருஷ்ணராஜ உடையார் காலத்தில் மைசூர் ராஜ்ஜியத்தின் தலைநகரான ஸ்ரீரங்கப் பட்டிணத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்டதாய் தெரிகிறது.

## எஞ்ஞ வராகன்:-

*தற்பொழுது இதே க்ஷேத்திரத்தில் உற்சவ மூர்த்தியாய் விளங்கும் பெருமான்.

## நிவேதனம்:-

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பூவராகப் பெருமானுக்கு "முத்தாசூரணம்" (கோரைக்கிழங்கு சம்மந்தப் பட்டது.) தினந்தோறும் நிவேதனம் ஆகிறது,

## புஷ்கரணி:-

இம் மஹா க்ஷேத்திரத்தில் பகவான் பூசமேதராக வந்து நின்றெழுந்தருளியபோது அவருடைய இரு கண்களிலிருந்தும், அரசமரமும், துளசியும் வெளிவந்ததாகவும் அதே சமயத்தில் பூவராகனுக்கு ஏற்பட்ட வியர்வை நீரே நித்ய புஷ்யகரணி என்ற புனித புஷ்கரணி ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதில் தீர்த்த மாடினால் இந்தியாவில் உள்ள புண்ணிய நதிகள் எல்லாவற்றிலும் தீர்த்த மாடினதற்கு ஒப்பாகும் எனவும் கூறப்படுகிறது. இப்புஷ்கரணியின் சுற்றிலுமுள்ள படித்துறைகளில் 16 இடங்களில் கல் வெட்டில் காணப்படும் தீர்த்த மகிமையும் பெயர்களையும் காண்க.

## சரித்திர சம்மந்தம்:-

மைசூர் அரசனை ஹைதர் அலி கர்நாடகத்தின் மீது படையெடுத்து வரும் பொழுது அவனது படைகள்

ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ள இக்கோயிலின் வழியாய் வரும் பொழுது முதலில் உள்ள கோபுரத்தை இடிக்க முயன்றதாகவும் ஆனால் முடியவில்லை என்றும் தெரிகிறது. கோபுர வாயிலில் முன் பக்கத்தில் உள்ள இரண்டு கல் தூண்களிலும் விசித்திரமான கதவுகள் இருந்ததாகவும் அவைகள் அறை குறையாக உடைக்கப்பட்டதாகவும், அக் கதவுகளில் உள்ள வெகு அழகான கல் வேலைகள் முற்றிலும் சிதைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் தெரிகிறது. அவ்விரண்டு தூண்களின் மேல் இப்பொழுதும் காணப்படும் இரு பெருங் கல் துண்டுகள் அவ்விரண்டு கல் தூண்களின் மேல் இருந்த ஓர் பெரிய கருங்கல், உத்திரத்தின் முனைகள் என்று தோன்றுகின்றன. இன்னும் கோயிலின் உள்ளிலும் வெளியிலும் கற்சிலைகளாகிய நேர்த்தியான உருவங்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக 16 கால் மண்டபத்திலுள்ள செஞ்சிக்கோட்டை நாயக அரசரான அச்சுத நாயகனின் கல்சிலை உருவத்தின் கையும்–காலும் சேதப்பட்டிருப்பதைப் பார்த்தால் தெரியவரும்.

## சித்திர வேலைபாடுகள்:-

கோபுரத்திற்கும், ஸந்நிதிக்கும், மத்தியில்கோயிலின் உட்புறத்தில் இரண்டு மண்டபங்கள் இருக்கின்றன. முதலில் இருப்பது நூற்றுக்கால் மண்டபம். இம் மண்டபத்தில் சில நாயக அரசர்களது சிலைகள் காணப்படுகின்றன. இச்சிலைகள் தஞ்சை நாயக அரசர்களைக் குறிக்க கூடியதான சிலைகளாக இருக்கலாம் என்று தோன்றுகிறது, இம் மண்டபத்தின் கீழண்டைக் கோடியில் உள்ள ஓர் கருங்கல் தூணில் (த்வஜஸ்தம்பத்திற் கருகில்) குதிரையின் மேல் ஒரு வீரன் சவாரி செய்வது போல் ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. இச்

சிலையில் காணப்படும் குதிரையின் முன்னங்காலில் ஒன்று ஒட்டப்பட்டிருப்பது போல் இருப்பதைக் கவனிக்கவும். இச்சிலையைக் கல் தச்சன் செதுக்கும் பொழுது அக் குதிரையின் கால் ஒடிந்து விட்டதாகவும் விடிந்து பார்த்தால் அக்குதிரையின் கால் ஒன்றும் சேதமுருமல் முழுமையும் நன்ருய் காணப்பட்டதாகவும் கர்ண பரம்பரையாய்த் தெரிகிறது. காரணம் கல்தச்சனுக்கு பகவானிடம் உள்ள உண்மையான பக்தியாய் இருக்கலாம் என்பதே.

## 16கால் மண்டபம்

இது நூற்றுக்கால் மண்டபத்திற்கு அடுத்தாற்போல் கீழ்ப்புரம் இருக்கிறது. இதற்கு "புருஷசூக்த மண்டபம்" என்று வேறு ஒரு பெயரும் உண்டு. இங்கு தான் அந்தணர்கள் பகவானுக்கு தினந்தோறும் புருஷசூக்தம் சொல்லுகிறது வழக்கம். இதில் உள்ள ஒவ்வொரு தூணும் 40 அங்குல சதுரமுள்ளது. இவைகள் வரிசைக்கு நான்கு தூண்களாக நான்கு வரிசைகளில் நிறுத்தப் பட்டிருக்கின்றன. புருஷசூக்தம் என்னும் வேத பாகமும் 16 அடிகளையே கொண்டிருப்பதனுலும் இப் பெயர் காரணமாயிருக்கலாம்.

இம் மண்டபத்தில் உள்ள இரண்டு தூண்களில் செஞ்சி நாயக அரசர்கள் அவர்கள் மனைவிகள்-குழந்தைகள் இவர்களின் சிலைகள் காணப்படுகின்றன. அச்சிலைகள் மிகவும் வேலைப்பாடுள்ளனவையாயும் நேர்த்தியாயும் காணப்படுகின்றன. முக்கியமாக செஞ்சி நாயக அரசிகளின் சிலையின் பின் பக்கத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட பின்னல் தொங்க விடப்பட்டிருக்கிறது. இவைகள் ஒவ்வொன்றும் சுமார் 16 அங்குலம் அல்லது 18 அங்குலம் நீளம் இருக்கும். செஞ்சிநாயக அரசனை

அச்சுதப்ப நாயகனின் சிலையின் விலாப் பக்கத்தில் சில வடுக்கள் இருக்கின்றன. ஒருசமயம் அச்சுதப்ப நாயக்கனுக்கு பக்கப்பிளவை வந்து தாங்கமாட்டாமல் அவன் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தபொழுது ஓர் நாள் இரவு ஓர் பன்றி வந்து அப் பக்கப்பிளவையைக் குளறிவிட்டுப் போனதாக அவன் கனவு கண்டானும். மறுநாள் எழுந்து பார்த்தபொழுது அப் பக்கப்பிளவை முற்றிலும் ஆறிப்போய் அது இருந்த இடத்தில் வடு மாத்திரம் காணப்பட்டதாம். இதைக்குறித்துக்காட்ட சிற்பியானவன் தன் கைத்திறத்தைக் காட்ட இச்சிலையில் அவ்வடுக் காணும்படி அமைத்திருக்கிருன் என்று அறியப்படுகிறது. இப்பதினறுகால் மண்டபத்தில் உள்ள கல் தூண்களின் அடியில் ீகாபிகா ஸ்திரீகள் ஸ்நாநம் செய்யும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனல் அவர்களது ஆடைகள் களவாடப்படும் காக்ஷி வெகு அழகாக சிற்பியால் செதுக்கப்பட்டிருக்கிறது. ரிஷ்ய சிருங்கர் காட்டில் இருந்து புத்ரகாமேஷ்டி யாகத்திற்கு வந்ததுமுதல் ராமாயண பட்டாபிஷேகம் வரையில் உள்ள சித்திரங்கள் கோர்வையாக வெகு அழகாக இத்தூண்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மகாபாரதம், பாகவதம் இவைகள் சம்மந்தமான சிற்ப வேலைகள் வெகு அழகாக செதுக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளைக் கூர்ந்து கவனித்தால் இந்தியாவின் கலைக்கு இப்புண்ணிய க்ஷேத்திரமும் ஓர் பிறப்பிடமாயிருக்கும் என்று தோன்றுகிறது. இம்மண்டபத்தின் வடமேற்கு மூலையில் கல் சங்கிலியை மாட்டுவதற்காகவுள்ள கருங்கல் வளையம் ஒன்றே ஒன்று மாத்திரம் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு தொங்கவிடப்பட்டிருக்கும் காக்ஷியை என்னென்று சொல்வது.

இக் கோயிலில் காணப்படும் சித்திர வேலையானது விஜயநகர ராஜ்யத்து சிற்பிகளால் செய்யப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

## உடையார்பாளையம் ஜமீன்தார் அவர்கள் திருப்பணி:-

இக் கோயிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபத்திற்கு வடக்கேயுள்ள கலியாண மண்டபம் உடையார்பாளையம் ஜமீனில் ஒருவரான எட்டாவது பட்டாபி ஷட்டர் யுவ ரங்க பூபாலர் அவர்களால் கட்டப்பட்டு உற்சவ காலங்களில் பகவான் எழுந்தருளுகிற வழக்கம் உக்கிராணத்தின் சுவரில் உள்ள வெட்டினல் தெரிகிறது. ஸ்ரீ பூவராஹ சுவாமி உற்சவ மூர்த்தி - அம்மன் இவ்விருவருக்கும் உள்ள தங்க கவசம் இன்னும் சில ஆபரணங்கள் இந்த சமஸ்தானதிபதியவர்களது முன்னேர்களால் செய்யப்பட்டதாக நல்லுரைக்கோவை I to IV என்னும் நூல்களால் தெரிகிறது. இன்னும் சிதம்பரம் தாலுக்கா கொள்ளிடக்கரையோரமாய் ஆதனத்தூர் என்னும் ஊரில் "ஓர் அன்ன சத்திரம்" கட்டப்பெற்றிப்பதாய் தெரிகிறது. அதற்கு பின்வரும் செய்யுள் சான்ருகும்.

"திருமால் மண் உண்ணுமல் சிவனும் நஞ்சைத்
தின்னுமல் செங்கமலப் பொருட்டு வேதன்
உருமாறி யன்னமெனப் பறந்திடமால்
உயர் மறையோர் வடிவின் வந்தே யன்ன
[முண்ணக்
கருமால் நேர் கரதலக் கல்யாண ரங்கக்
காலாட்கள் தோழ மன்னர்க் கருத்து வந்தே
வருமா மதனத்தூரில் அன்ன சத்ரம்
வைத்திட்டா ரெவரும் வந்துய்த்திட்டாரே"

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ பூவராக சுவாமி தேவஸ்தானம் இந்துசமய அறநிலைய இலாக்காவிற்குட்பட்டது. இத் தேவஸ்தானத்திற்கு தர்மகர்த்தாக்கள் ஷ்டி இலாகாவினால் நியமிக்கப்படுகின்றனர்.

மேலே சொன்ன கலியாண மண்டபத்தில்தான் மின்சார விளக்குகளுடன் கூடிய கண்ணாடி அறை அமைக்கப்பட்டு அதைப்பார்க்கவரும் யாத்ரீகர்களை வசீகரிக்கிறது விசேஷ காலங்களில் பூவராஹப்பெருமாள் உபய நாச்சியாருடன் எழுந்தருளி அளிக்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

## ஐரோப்பியரின் நன்கொடை:-

கி. பி. 1813 — 1826 இல் தென்னாற்காடு ஜில்லா கலெக்டராயிருந்த Hyde (ஹைடி) என்பவரால் சில ஆபரணங்களும் ஓர் ஜதை இரும்புச் சங்கிலி தேர் இழுப்பதற்காக வாங்கிக்கொடுக்கப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

---

Reference: South Indian Inscriptions : Volume II
Prof. V. Rangarcharya.
Epigraphic report *145/1898*
See. Trien-Catal. M. S. S. *1910-3-P. 496*
South Arcot Dt. Gazetter : Part I & II
Page. *291-92*.

## ஸ்ரீமுஷ்ணத்தில் ஸ்ரீ பூவராக சுவாமி கோயிலில் உள்ள சில விசேஷக் குறிப்புகள்

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ பூவராக சுவாமி கோயிலுக்குள் ... கோபுரத்திற்கு வடக்கு பக்கத்தில் மேற்கு

நோக்கியிருக்கும் ஸ்ரீ வெங்கடாசலபதியை முதலில் தரிசித்துவிட்டு, பின்னர் ஸ்ரீ பூவராகப்பெருமானை தரிசிப்பது, இதேமாதிரி திருப்பதியில் புஷ்கரணியின் மேலண்டை கரையில் கிழக்கு நோக்கியிருக்கும் ஸ்ரீ பூவராக மூர்த்தியை முதலில் தரிசித்துவிட்டு அதன்பின்னர் ஸ்ரீ வெங்கடாசலபதியைத் தரிசிப்பது, ஆக இந்த இரண்டும் ஓர் விசேஷமான ஆச்சர்யம் எனக் கூறலாம் அதாவது ஸ்ரீபூவராகன் எழுந்தருளி இருக்கும் தலம் திருவேங்கடமுடையானது என்றும் திருவேங்கடமுடையான் எழுந்தருளி இருக்கும் தலம் ஸ்ரீபூவராகப் பெருமான் உடையது என்றும் புராணங்களில்கூறுவதாக புராண ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்தப்படி தெரிந்தவர்கள் அவ்விதம் சேவை செய்து வருகின்றனர்.

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ பூவராகஸ்வாமி கோயிலில் மூலவரின் சந்நிதிக்கு வடக்கேயுள்ள கோமுகத்தை ஓர் சிங்கம் தாங்கிக்கொண்டிருப்பதும் அச்சிங்கத்தின் வாய் திறந்திருப்பதும், அதன் வாயிலில் ஓர் கருங்கல் குண்டு உருளுவதும் அதைக் கையால் உருட்டித் தள்ளினால் கீழே விழாமல் இருப்பதும் ஓர் பெரிய ஆச்சரியம்.

**அரச மரம்:-**

அஸ்வத்தம் துளஸீஞ்ச நித்ய ஸரஸீம்

ஸ்வேதாது ஸ்ருஜன் நித்யஸ:

ப்ரம்மாத்தியை: பரிபூஜித ஸஹரம:

என்று பிரம்மம், நாரதீயம் புராணங்களில் சொல்லியபடி அஸ்வத்த ரூபமே வராஹ பகவான் திருக்கண்களில் இருந்து தோன்றியதால் சதுர் வர்ணத்தார்களும் சகலவிதமான அபீஷ்ட சித்தியைப் பெறுமாறு எப்பொழும் சுற்றி வருகின்றனர். எப்படி ராமேஸ்வரத்தில் சமுத்திர ஸ்நானம் எப்பொழுதும் விசேஷமோ அதேப் போல் ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ள அரசமரத்தை எப்பொழுதும் சுற்றிவரலாம் என்றும் புராணங்களில் கூறுகிறது. பிப்பலாதி சாபம் இந்த அரசுக்கு கிடையாது என்பதை நாரதீயம், ப்ராமாண்டம், வராஹம் முதலான புராணங்கள் கூறுவதாக புராணிகர்கள் கூறுகின்றனர். வைணவர்களும் இவ்வரச மரத்தை இத்தலத்தில் மாத்திரம் சுற்றுகின்றனர் என்று கூறப்படுகிறது.

## குழந்தை-அம்மன் கோயில்:-

இது இக்கோயிலின் வடவண்டை பிரகாரத்தில் அமைந்துள்ளது. இங்கே சப்த கன்னிகைகள் எழுந்தருளியிருக்கின்றனர். செங்குந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர் இதற்கு பூசாரி. இங்கே சகுனம் பார்த்து பக்தர்கள் தங்கள் இஷ்ட சித்தியைப் பெறுகின்றனர்.

## பூவராகன் சந்நிதிக்கு வடக்கேயுள்ள இராமர் கோயில்:-

பூவராகப் பெருமானின் சந்நிதிக்கு வெளியே வடக்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி இராமர் சந்நிதி உள்ளது இங்கே இராமர், லக்ஷ்மணர், சீதா பிராட்டியார், ஹனுமார் பட்டாபிஷேக கோலத்துடன் காக்ஷி அளிக்கின்றனர். பரதன், சத்ருக்னன், ஹனுமார் இவர்கள் ஸ்ரீ ராமரின் திருவடிகளை வணங்குவதை பார்க்கலாம். மச்சாவதாரம், கூர்மாவதாரம் இந்த இரண்டு அவதாரங்களும் இருக்கின்றன. வாயுபகவான் அம்சமான ஹனுமார், பீமன், மத்வர், இந்த மூன்று அவதாரங்களையும் காணலாம்.

## ஸ்ரீமுஷ்ணத்தில் ஸ்ரீமத்வாச்சாரியார் விஜயம்:-

மேற்படி ப்ராம்மண்டம், நாரதீயம், வராஹ புராணங்களில் நீர்த்த பிரசிம்ஸையில் சொல்லியபடி வாயு அம்சமான ஸ்ரீமத்வாசாரியார் இந்த தலத்திலுள்ள மூர்த்தியை அநேகநாள் ஆராதித்த பிரமாணங்களால் ஸ்ரீ மத்வ மத குருவாகிய ஸ்ரீ உத்திராதி மடத்து ஸ்வாமிகளுக்கு இக்கோயிலில் உள்ள உற்சவ மூர்த்திக்கு பூஜை செய்யும் பாத்தியம் இன்றைக்கும் இருந்து வருகிறது. ஸ்ரீ பூவராக சுவாமி ஸந்நிதியில் மாத்வர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் அருள்பாடு தீர்த்தம் முதலிய மரியாதைகள் சமமாக இன்றைக்கும் நடந்து வருகிறது.

## ஸ்ரீமுஷ்ணம் தண்ட தீர்த்த மஹிமை:-

சுமார் 850 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ ஸ்ரீமத்வாசாரியார் திக்விஜய யாத்திரையின்பொழுது இச்க்ஷேத்திரத்திற்கு வரும் வழியில், தன் சிஷ்யர்களில் ஒருவரின் மனைவி பூர்ண கர்ப்பிணியாய் இருந்தவள், இத்தலத்திற்கு மேற்கே சுமார் 1 மைல் தூரத்தில் பிரசவ வேதனை அடைந்து கஷ்டப்பட்டாள் அவ்வமயம் உடன் வந்த ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகள் அத் தம்பதிகளிடம் தயை கூர்ந்து அந்த க்ஷணமே அவ்விடத்தில், தன் தண்டத்தினால் பூமியைத் தோண்டி கையிலுள்ள கமண்டல தீர்த்தத்தினால் அத்தடாகத்தை நிரப்பி, வர்ண ஜெபத்தினால் அபிமந்திரித்து, தன் காஷாயத்தினால் ஓர் தண்டத்தை நடுவே நிறுத்தி கூடாரம் ஏற்படுத்திக்கொடுத்து ஸுகப்பிரசவம் ஆகி ஸுக ஸௌகரியம் ஆனதும் குழந்தையுடன் தம்பதியாய் தன் சந்நிதானத்திற்கு வந்துசேரும்படி அனுக்கிரஹித்து ஸ்ரீமுஷ்ணத்திற்கு

விஜயம் செய்தார். அன்றுமுதல் நாளது வரையில் அத் தடாகம் திவ்ய பூர்ணமாய் அனுஷ்டானுதிகளுக்கும் சர்வ சிலாக்யமாயும் புண்ய தீர்த்தமாயும் விளங்குகிறது.

புராணம் கல் வெட்டுகள், சரித்திர சம்பந்தம், சிறந்த புலவர்களின் கவிகள் இவற்றின் மூலம் ஸ்ரீமுஷ்ணம் என்னும் ஸ்தலத்தைப்பற்றி இதுகாறும் கூறப்பட்டது.

(குறிப்பு) ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீபூவராகசுவாமி மீதுள்ள சாஹித்தயங்களை இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் முதல் அனுபந்தத்தில் காண்க.

## கிள்ளை மாசி மக வைபவம்:-

இனி மாசிமக விழாவின் முக்கியத்துவம் கிள்ளைக்கு அருகில்உள்ள சமுத்திரத்திற்கு ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீபூவராகப் பெருமான் எழுந்தருளும் முக்கியத்துவம் இன்னும் பிற வற்றையும் ஆராய்வோம்.

## மாசி மகம் என்னும் மக விழாவின் சிறப்பு:-

ஆண்டு தோறும் மாசி மாதத்தில் பௌர்ணமி, மக நக்ஷத்திரம் கூடிய நாளில் மாசி மகம் என்னும் மக விழா பண்டைக்காலம் தொட்டு நடைபெற்று வருகிறது. இம் மக விழா தினத்தில் பக்த கோடிகள் கடலில் நீராடினுல் பலபுண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கப்பெற்று, புனிதமடைவார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன இக் காரணத்திஞலேயே நம் தமிழ் நாட்டு சிவ-வைணவ ஸ்தலங்களில் உள்ள கோயில்களுள் சிலவற்றில் மாசி மக விழா பெரு விழாவாக 10 நாளும் கொண்டாடப்படுகிறது எனக் கூறலாம். ஆண்டு தோறும் மக விழா தினம்

ஆங்காங்குள்ள சுவாமிகள் அருகில் உள்ள நதிகள் கடல் இவைகளுக்கு எழுந்தருளி தீர்த்தவாரி கொடுத்து வருவதை நாம் காண்கிறோம். 'பஞ்சாங்க ரீதியின்படி' இம் மக விழாவே பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு தரம் "மகாமகம்" என்னும் பெருவிழாவாக கும்பகோணத்தில் நடைபெறுகிறது என்பதை நாம் அறிவோம்.

இம் மக விழா ஆண்டு தோறும் நடக்கும் காலம் உத்தராயணம் பிறந்த பிறகு வசந்த காலம் ஆரம்பிக்கும் காலத்திற்கு சிறிது முந்தியதாகும். இந்தக் காலத்தில் அறுவடையாகி மக்கள் தங்கள் வாழ்க்கைக்கான உணவுப் பொருள்களை சேகரித்து வைத்துக்கொள்ளவும். போதிய செலவு செய்ய வருவாயும் உண்டாக ஓர் நல்ல சூழ்நிலை ஏற்படுகிறது ஆகவே மக்கள் மகவிழாவின் போது கடலாடி புனித மடையவும் குதூகலமாக கொண்டாடவும் நல்ல வாய்ப்புகள் உள்ளன எனக் கூறலாம்.

மாசிமகத்தில் கடலாடும் சிறப்பைபற்றி திருஞான சம்பந்தர் தமதரும் தேவாரத்தில் பாடியிருப்பதை காண்க:-

" மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலிச்சரமமர்ந்த
னடலானே நூருமடிகளடி பரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய் "

(திருமயிலை—திருப்பூம்பாவை, 6ம் பதிகம்)

## ஸ்ரீ பூவராஹன் கிள்ளை கடற்கரைக்கு எழுந்தருளும் புராண வரலாறு:-

"துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரி பாலனார்த்தமாய் வராக ரூபமெடுத்து ஹிரண்யாக்ஷனை சம்ஹரித்து, பூசேமதராக

தான் எடுத்த அவதாரத் திருக்கோலத்துடன் விளங்கும் பகவானுக்கு பிரஹல்லாத்தாழ்வார் தமக்குள்ள சாபம் நீங்க பிரம்மதேவன் ஆஞ்ஞைப்படி மாசி மாதத்தில் உற்சவம் செய்ததாயும், உற்சவம் ஆனதும், ரத அவ ரோகணம் செய்ததும், கோயிலுக்குள் போகாமல் அப் படியே பகவான் அவபிருத ஸ்நாநத்திற்காக கீழ்க்கோடி யில் சிதம்பரத்தில் இருந்து சுமார் 8 மைல் தொலைவி லுள்ள கிள்ளைக்கு அருகாமையில் உள்ள கடலுக்கு மாசி மகத்தன்று பிரதி வருஷமும் எழுந்தருளி தரிசனார்த்த மாய் வரும் யாத்திரை வாசிகளுக்கு அருள் புரிந்துவரும் வழக்கம் வெகு காலமாய் நடந்து வருகிறது கிள்ளை என்னும் தலம் சென்னை-ராமேஸ்வரம் மெயின் இருப்புப் பாதையில் கிள்ளை ரயில்வே நிலையத்தில் இருந்து 3மைல் தொலைவில் உள்ளது. சிதம்பரத்தில் இருந்து கிள்ளைக்கு பஸ்ஸும் போகிறது.

தவிர கிள்ளை சமுத்திர தீர்த்தத்திற்கு குய்ய தீர்த்த மென்னும் வேறு ஒரு பெயரும் உண்டு என்று புராண வாயிலாக தெரிகிறது. பக்தியே உருவாகக் கொண்ட வியாக்ரபாத முனிவரின் திருவாக்குக்கு இணங்க வருணன் ஒரு காலத்தில் தனக்கேற்பட்ட சாபத்தை நீக்கிக் கொள்ள மாசி மக புண்ணியதின காலத்தில், தில்லைக்கு ஈசானியத்தில் உள்ள சிறப்புடைய குய்ய தீர்த்தம் என்னும் (கிள்ளைக்கு அருகில் உள்ள சமுத்திரத் தில்) ஸ்நானம் செய்து சாபம் தீர்ந்து, சிற்சபையில் அவைரதம் நர்த்தனம் புரியும் நடராஜப் பெருமானை தோத்திரம் செய்து வழிபட்டான் என்றும் புராண வாயி லாக தெரிகிறது. இக்காரணம் கருதியே நடராஜப் பெருமானும் கிள்ளைக்கு மாசிமக தினம் எழுந்தருளு கிறார் எனக் கூறலாம்.

## சரித்திர காலத்திலும் கிள்ளை இடம் பெற்றிருக்கிறது:-

முதல் குலோத்துங்கன், (கி.பி. 1070-1120) இவனுக்குப் பிறகு விக்கிரம சோழன், இவர்கள் காலத்தில் படை வீரனாக இருந்த மணவிற் கூத்தன் என்பான் ஒருவன் இருந்தான். இம் மணவிற்கூத்தன் மாசிமாதத்தில் (மக விழாவில்) கூத்தப் பெருமான் கடலாடி நீராடி வீற்றிருக்க கிள்ளையில் ஒரு மண்டபத்தைக் கட்டியிருக்கிறான்; கிள்ளைக் கடற்கரைக்குப் போய் கடலில் நீராடச் செல்லுவதற்கு ஒருபெருவழி (சிதம்பரத்தில் இருந்து கிள்ளைக்கு) ஒன்றையும் அமைத்திருக்கிறான்; என்று ஆராய்ச்சியாளர்களால் ஆராய்ச்சி செய்யப் பட்டுள்ளது.

---

Reference:- "திருக்கோயில்" ஜுலை 1960 மாலை-2 மணி 10ல் பக்கம் 12. (சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்பு இலாகாவால் வெளியிடப்பட்டது).

கர்நாடகப் போர் நடந்த இடங்களில் ஒன்றான பறங்கிப்பேட்டைக்கு அருகில் கிள்ளை என்னும் இந்த தலம் அமைந்துள்ளது.

இம் மண்டபத்திற்கு கிள்ளையில் நடராஜர் மண்டபம் என்று பெயர். இம் மண்டபத்திற்கு மாசி மகத்திற்கு உப்பு வெங்கட்ராயர் தர்மத்தில் இருந்து வழக்கமாய் பந்தல் போட்டு தரப்படுகிறது. நடராஜாவுடன் வரும் தீக்ஷிதர்கள் கோயில் மரியாதையுடன் உப்பு வெங்கட்ராயர் டிரஸ்டியை கண்டுகொண்டு மாமூல் சம்பாவனையும் வாங்கிக் கொண்டு போகின்றனர்.

இக்கிள்ளை கிராமத்திற்கு மாசி மகத்தன்று தில்லைக் கோவிந்தராஜப் பெருமான், பெருமாத்தூர் ஸ்ரீனிவாசப்

பெருமான், பின்னத்தூர் இராமர், புவனகிரி புவனகிரிசுவரர், தில்லை நடராஜர், வளையமாதேவி ஸ்ரீவேத நாராயணப் பெருமாள் முதலிய சுவாமிகள் எழுந்தருளி சமுத்திர தீர்த்தவாரி ஆகிறது. (இப்போது சிறிது காலமாக வளையமாதேவி ஸ்ரீவேத நாராயணப் பெருமாள் வருவதில்லை.)

## பூவராஹனுக்கு கிள்ளையில் மாசி மக உற்சவம் சாஸ்வதமாய் நடக்க ஏற்பாடு செய்யப்பட்ட வரலாறு:-

இம் மாசி மக உற்சவமானது கிள்ளை கிராமத்தில் சாசுவதமாய் நடைபெற ஏற்பாடு செய்தவர் புண்ணிய புருஷரான உப்பு வெங்கட்ராயர் என்னும் தருமவானே. இவர் 19வது நூற்றாண்டில் இருந்தவர் என்று இவரது தஸ்தாவேஜினல் தெரிகிறது. இவர் அனந்தபுரம் ஜில்லாவில் உப்புபுரி என்ற ஊரில் இருந்து தென்னாற் கார்டில் வந்து குடியேறியதாக ஸ்ரீமுஷ்ணம் புஷ்கரணி யின் கீழண்டைப் பக்கத்திலுள்ள கல் வெட்டினாலும் கர்ண பரம்பரைச் செய்தியினாலும் தெரிகிறது. ஸ்ரீபூவராஹப் பெருமான் வழக்கம்போல் கிள்ளைக்கு மாசி மகத்தன்று எழுந்தருளும் பொழுது அவ்விடம் வரும் யாத்ரீகர்கள் தங்க இடமில்லாமலும், உண்ண உணவு கிடைக்காமலும் கஷ்டப்படுவதை உப்பு வெங்கட்ராயர் என்னும் தருமவான் தாம் உத்தியோக முறையில் அங்கு முகாம் வந்த பொழுது பார்க்க நேர்ந்தது. இக் குறையை நிவர்த்திக்க தாம் அரும்பாடு பட்டு அதற்கான தர்மத்தை பின் வருமாறு ஸ்தாபித்து ஸ்ரீ பூவராஹனுடைய அனுக் கிரகத்தை தான் பரிபூர்ணமாய் அடைந்ததோடமல்லாமல் அவர் சந்ததியாரும் மேற்படி தர்ம கைங்கரியத்தை

நிரந்தரமாய் செய்துக் கொண்டு இருக்க ஓர் சாஸ்வத மான திட்டம் செய்து வைத்து என்றும் அழியாத புகழை அடைந்தார்.

## கிள்ளையில் இவரது திருப்பணிகள்:-

ஸ்ரீ பூவராஹப்பெருமாள் சமுத்திரம் போய்வந்து வீற்றிருக்கவும், அபிஷேக ஆராதனைகள் செய்யவும் ஓர் மண்டபம் கிள்ளை திருநாள்தோப்பில் கட்டப்பட்டிருக்கிறது. (இப்போதைக்கு 142 வருஷங்கள் ஆயிற்றென்று இம்மண்டபத்தில் உள்ள கல் வெட்டினல் தெரிகிறது.) இவரால் கிள்ளையில் ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயில் ஒன்றும் கட்டப்பட்டு அன்ருட பூஜைக்காக உப்பு வெங்கட்ராயர் தர்மத்திலிருந்து சம்பளமும் கொடுக்கப்படுகிறது. கிள்ளையில் ஆடி அமாவாசை, தை அமாவாசை, மாசி மகம் இந்த விசேஷ காலங்களில் கடலாட வரும் யாத்ரீகர்கள் வந்து தங்க சத்திரம் என்பதற்கு அனுசரணையாக உப்பு வெங்கட்ராயருடைய குமாரர் உப்பு பூராமூர்த்தி ராயரால் மேலே சொன்ன தர்மத்திற்காக தன் வீட்டை 1891-ம் வருஷத்தில் ஒரு உயிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமுஷ்ணம் புஷ்கரணி படித்துறையில் உப்பு வெங்கட்ராயருடைய திருப்பணியைப் பற்றிய கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஸ்ரீமுஷ்ணம் கல்வெட்டில் பல்லாரி ஜில்லா ஜிக்கல்மடுகை குண்டோப ராவ் அவர்களும் பல தர்மம் செய்திருப்பதாகத் தெரிகிறது. குண்டோப ராவ் சந்ததியார்கள் ஸ்ரீமுஷ்ணத்தில நடைபெறும் வசந்த உற்சவம் – பிரம்மோற்சவம் இவ்உற்சவத்திற்கு வரும் யாத்திரை வாசிகளுக்கு வந்து தங்கவும் அன்னதானம் செய்யவும் குண்டோப ராவ் என்பவரால் ஸ்ரீமுஷ்ணத்தில் ஓர் சத்திரமும் கட்டப்பட்டிருக்கிறது. உப்புவெங்கட்ராயரது திருப்பணியைப்பற்றி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கன்னட சாஹித்தியத்திலும் - கிள்ளையில் வெகுகாலமாக பாடப்படும் காமண்டிப் பாட்டிலும் காணலாம்.

## கிள்ளை முஸ்லீம் தர்மவானின் நன்கொடை:-

உப்பு வெங்கட்ராயருக்கு இனுமாக மானியம் விட்டவர் அப்போது கிள்ளையில் இருந்த ஜாகீர்தார ராகிய ஓர் முஸ்லீம் கனவான். இக்கனவான் தமக்கு உப்பு வெங்கட்ராயரிடம் உள்ள அன்பு-நட்பு காரண மாக தாம் மனப்பூர்வமாக அவருக்கு மனமுவந்து இனுமாக மானியம் கொடுத்து இருக்கிறார் என்று தெரி கிறது. தமக்கு கிடைத்த இனும் நிலமானது தர்மத்திற்கு பிரயோஜனப்படட்டும் எனக்கருதி உப்பு வெங்கட்ராயர் அவர்களால் ஸ்ரீ பூவராஹஸ்வாமி மாசி மக உற்சவத் திற்கு என எழுதி வைக்கப்பட்டு அந்த தர்மம் இவரது சந்ததியார்காளால் நடத்தப்பட்டு வருகிறது.

## கிள்ளை தைக்காலில் தர்க்காவுக்கு முன் ஸ்ரீ பூவராகப் பெருமாள்:-

இந்த தர்க்காவுக்குள் அடக்கமாயிருப்பவர், மூல புருஷராகிய ஹஸரத் சையத் ரஹமத்துல்லாஹ் ஷுத்தாரி. இவர் கிள்ளை தர்க்காவில் சுமார் 220 வருஷங்களுக்கு முன் அடக்கமாய் இருப்பதாக தெரிகிறது. அவருக்கு Nawab of Arcot அவர்களால் கொடுக்கப்பட்ட மானியச் சொத்துக்கள் கிள்ளை தர்க்காவைச் சேர்ந்தது. மேற்படியாருடைய பேரனுகிய சையத்ஷா குலாம் மொஹிய்தீன் ஷுத்தாரி அவர்களால் மேற்படி மானியங்கள் பரிபாலனம் செய்யப்பட்டு வந்திருக்கிறது எனத் தெரிகிறது. கிள்ளை உப்பு வெங்கட்ராயர் இவரது காலத்தில் தாசில்தாரராக இருந்தார். மேலே சொன்ன மானியதாரர் அவர்களால் உப்பு வெங்கட்ராயரிடம் தமக்குள்ள அன்பு — நட்பு காரணமாக உப்பு வெங்கட்ராயருக்கு சுமார் நஞ்சை 14 காணி குத்தகையாகவும், 6 காணி சாசுவதகவுலாகவும்

கொடுக்கப்பட்டு நாளது பரியந்தம் இந்த மானியம் உப்பு வெங்கட்ராயர் சந்ததியார்களால் பரம்பரையாக அனுபவிக்கப்பட்டு சர்க்காருக்கு வாய்தாவும் செலுத்தப் பட்டும் வருகிறது. இதில்இருந்து கிடைக்கும் வருமானத் தில் இருந்துதான் ஸ்ரீமுஷ்ணத்தில் நடைபெறும் ஜேஷ்டாபிஷேகம் ஸ்ரீ பூவராக சுவாமி சந்நிதியில் உள்ள அகண்டம், கிள்ளை மாசிமக உற்சவம், கிள்ளையில் உள்ள ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமி பூஜை முதலியன நடத்தப் படுகின்றன.

இதனுடைய ஓர் நன்றியை முன்னிட்டு ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ பூவராக சுவாமி டிரஸ்டியான உடையார்பாளையம் (கிள்ளை மாசிமக தருமம் ஏற்பட்டபோதிருந்தவர்) ம. ஸ்ரீ சமஸ்தானாதிபதி அவர்கள் கிள்ளை தர்க்காவுக்குள் அடக்கமாய் இருக்கும் மகானுக்கு எதிரில் பல்லக்குடன் ஸ்ரீ பூவராக சுவாமியை நிறுத்தி மரியாதை முதலியன (கிள்ளை மாசி மகத்தன்று) வழக்கமாய் நடத்த அனு மதித்தது மிகவும் பாராட்டுதற்கு உரியதாகும். அதன்படி ஸ்ரீ பூவராக சுவாமி கிள்ளை மாசிமகத்தன்று கிள்ளை எல்லையில் வந்தவுடன் உப்பு வெங்கட்ராயர் சந்ததியார் களான டிரஸ்டிகளால் ஸ்ரீ பூவராகப் பெருமானை வரிசை மேள வாத்தியங்கள் முதலானவைகளுடன் வரவேற்றும் அதன்பின் கிள்ளை திருநாள்தோப்புக்கு வரும்போது, தைக்காலில் தர்க்காவுக்கு எதிரில் ஸ்ரீ பூவராகசுவாமி யின் பல்லக்கு நிறுத்தப்பட்டும், பல்லக்குடன் வரும் மேளதாளங்கள், விருதுகள் இவைகளுடன் உப்பு வெங்கட்ராயர் வம்சத்தினரான டிரஸ்டிகள் தர்க்காவுக் குள் சென்றதும், அங்கே மேள தாளங்கள் நிறுத்தப் பட்டவுடன், டிரஸ்டிகள் தர்க்காவுக்குள் போய் தர்க்கா வுக்குள் அடக்கமாயிருக்கும் மகானுக்கு சர்க்கரை மலர

வரைக்கொண்டு பாத்தியா ஓதி மரியாதை செலுத்தி வரும் வழக்கம் ஒரு நூற்றாண்டுக்குமேல் நடைபெற்று வருகின்றது.

கிள்ளை சமுத்திரத்திற்கு குதிரை வாகனத்தின்மேல் ஸ்ரீ பூவராஹப் பெருமான் ஆரோஹணித்துப் போய் தீர்த்தவாரி கொடுத்தபின் திருநாள்தோப்பு ஸ்ரீபூவராக சுவாமி மண்டபத்தில் எழுந்தருளியபின் திருமஞ்சனம், பிராம்மண சந்தர்ப்பணை நடந்தபின் அன்றிரவு மேளக் கச்சேரி, வாணவேடிக்கையுடன் திருவுலாக் காட்சியுடன் ஸ்ரீமுஷ்ணத்திற்கு திரும்பும் வழியில் மகத்துவாழ்க் கைக்கு எழுந்தருளும்போது தைக்காலில் மறுபடியும் தர்க்கா எதிரில் நிறுத்தப்பட்டு வாண வேடிக்கைகள் நடந்தபின், தர்க்கா டிரஸ்டி அவர்களுடைய உத்திரவுப் பெற்று போவது வழக்கமாய் இருந்து வருகிறது. அதோடு தர்கா டிரஸ்டி அவர்கள் சுவாமியுடன் வந்த சிப்பந்திகள், மற்ற உத்தியோகஸ்தர்கள், இவர்களை கிள்ளையில் நடந்த உபசரிப்பு சம்மந்தமாக விசாரித்து வழி அனுப்புவதும் வெகுகாலமாய் மாமூலாய் நடந்து வருகிறது.

இவ்வாறு நடந்துவரும் நிகழ்ச்சியானது ஹிந்து-முஸ்லீம்களுக்கு இடையே உள்ள ஒற்றுமை மனப்பான்மையையும், சமரச மனப்பான்மையையும் கிள்ளை என்னும் கிராமத்தில் நிதர்சனமாய் படம் பிடித்தாற்போல் பார்க்க முடிகிறது. ஆகவே கிள்ளை என்னும் கிராமத்திற்கு இது ஓர் தனிச்சிறப்பை அளிக்கிறது என்பது மிகை யாகாது.

குறிப்பு: ஸ்ரீ பூவராகசுவாமி கிள்ளை தர்க்காவுக்குமுன் நிறுத்தப்பட்டு தர்காவில் செய்யப்படும் மரியாதை

சம்மந்தமான இந்த வரலாறு இப்போது தர்கா டிரஸ்டியாக இருக்கும் C. S. பீரான் சாஹிப் அவர்களால் விவரிக்கப்பட்டது.

ஸ்ரீமுஷ்ணத்தில் ஸ்ரீ பூவராக சுவாமிக்கு ஆண்டுதோறும் நடைபெறும் மாசி மக ரதோற்சவம் ஆனதும் கிள்ளைக்கு வந்து சமுத்திர தீர்த்தவாரி கொடுக்க எழுந்தருளும்போது வழி நெடுக பரரூர்சாவடி, பெருமாத்தூர் முதலிய இடங்களில் மண்டகப்படி செய்துகொண்டு மாசி மகத்தன்று கிள்ளைக்கு எழுந்தருளி சமுத்திர தீர்த்தவாரி திருமஞ்சனம், யாத்திரை வாசிகளுக்கு அன்னதானம் இவை நடந்தபின் தன் பரிவாரங்களோடு அன்றிரவு கிள்ளையில் திருவுலாக் காக்ஷியுடன் ஸ்ரீமுஷ்ணத்திற்கு திரும்பி போகும் போது, மகத்துவாழ்க்கை, மூங்கிலடி, சிதம்பரம், புவனகிரி, ஆலம்பாடி, ஹரிராஜபுரம், கானூர் சாத்தவட்டம். தேத்தாம்பாளையம், ராமாபுரம், கவுரப்பாளையம் முதலான இடங்களுக்கு எழுந்தருளி மண்டகப்படி செய்துகொண்டு கடைசியாக ஸ்ரீமுஷ்ணம் போய் சேர சுமார் 13 நாட்கள் ஆகின்றன.

ஸ்ரீ பூவராக பரப்ரம்மணே நம:

## அநுபந்தம்—I

இத்திவ்ய தலம் ஆழ்வார்களால் பாடப்பெற்று பாடல் பெற்ற தலமாக இல்லாத போதிலும் வராக அவதாரத்தைப்பற்றி அவர்கள் பல இடங்களில் யாத்திரை செய்தபோது தமதரிய நாலாயிரதிவ்ய பிரபந்தத்தில் பாடியிருக்கின்றனர். அவைகளுள் நம்மாழ்வாரால் பாடப்பெற்றுள்ள இரண்டு பாசுரங்களையும் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றுள்ள ஒரு பாசுரத்தையும் எடுத்து இப்புத்தகத்தில் முகப்பிலும், முதல் அனுபந்தத்திலும் வெளியிட்டிருக்கிறோம்.

### ஆழ்வார் பாசுரம்:-

ஈனச்சொல்லாயினுமாக, ஏறிதிரை வையம் முற்றும்
ஏனத் துருவாய் இடந்த பிரான், இருங்கற்பகம் சேர்
வானத் தவர்க்குமல் லாதவர்க்கும் மற்றெல்லா
[யவர்க்கும்
ஞானப் பிரானை யல்லாலில்லை, நான் கண்ட
[நல்லதுவே
(நம்மாழ்வார்)

வெற்றிநேர் திண்மை விலங்கல் மா மேனி
வெள்ளெயிற் றொள்ளெரித் தறுகண்
பன்றியாய் அன்று பார்மகள் பயலை
தீர்த்தவன் பஞ்சவர் பாகன்
ஒன்றலாவுருவத் துலப்பில் பல் காலத்
துயர்கொடி யொளிவளர் மதியம்,
சென்றுவேர் சென்னிச் சிகரகன் மாடத்
திருக்கண்ணங்குடியுள் நின்றானே.
(திருமங்கையாழ்வார்)

## தமிழ் சாஹித்தியங்கள்:-

1) "பூவராகரே பரிபூர்ண போத மாதவரே"
என்று தொடங்கும் பாட்டு

2) "தேவரொலியிலும் ஸ்ருங்காரமும் என்
[சொல்வேன்
தேனே மானே தானே ஸ்ரீஹரி"
என்று தொடங்கும் பாட்டு
(கனம். கிருஷ்ணய்யர்)
டாக்டர் சுவாமிநாதய்யர் அவர்கள்
பாட்டனார்.

2) "தெள்ளு புகழ் படைத்த | திருமுட்டத் தெம்பெருமாள்
உள்ள நிலமெல்லாம் | உழுதுண்டாரம்மானை
உள்ள நிலமெல்லாம் | உழுதுண்டாராமாயின்
கள்ள னிவனென்று | சொல்லிச் சொல்லிக்
| கட்டுவதேனம்மானை
கட்டாரோ போரில் கதிர் மறைத்தாலம்மானை"
(இரட்டையர்)

3) "முட்டத்துப் பன்றி முளரித் திருப்பதத்தை
கிட்டத்துப்பன்றிக் கிடந்தேனே - தொட்டு
மருங்கிலே சங்கெடுத்தமாலோ யெனக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா"
(ஒப்பிலாமணிப்புலவர்)

## ஸ்ரீ பூவராகரைப்பற்றி தனிப்பாடல் திரட்டில் உள்ள சில தமிழ்க் கவிதைகள்.

1) "தெரு முட்டப் பாளை சிதறி வளர் பூகத்
தரு முட்டச செவ்வாளை தாவும்-திருமுய்த்
தூரிலே கண்ட எனுரு புதுமை பன்றிக்கு
மாரிலே கொம்பான வாறு" [காளமேகம்]

ஸ்ரீமுஷ்ண ஸ்தல புராணம் தமிழில் செய்யுள் நடையில் வளையமாதேவி—ஆறுமுகம் அம்மையப் பிள்ளை நயினார் சுப்பிரமணிய பிள்ளை இவர்கள் முயற்சியால் புதுவை – ஒ. வி. விலக்ஷண கவி ஸ்ரீமான் இராமாநுச நாவலவர்களால் இயற்றப்பெற்றிருக்கிறது. இது இப் போது கிடைப்பது கஷ்டம். இதன் ஆசிரியரிடம் உள்ளதும் கீலமாய் போய்விட்டது.

கிள்ளை உப்பு வெங்கட்ராயர்மீதுள்ள கன்னட சாஹித்தியத்யத்தையும், கிள்ளையில் வெகு காலமாய் பாடப்படுகிற காமண்டிப்பாட்டிலும் பாடப்படுகிற தமிழ்க் கவியையும் இரண்டாவது அனுபந்தத்தில் காண்க.

## அனுபந்தம்—II

## ஸ்ரீ பூவராக சுவாமி மீதுள்ள சில கன்னடச் சாஹித்யங்கள்

"மரியாதே நின்ன பாதா ஸ்மரனே இத்தனுதின
பொரயோ ஸ்ரீ பூவராஹ"

என்று தொடங்கும் பாட்டு (ஜெகன்னாத தாஸர்)

"நாரி நோடலே ரதா ஏரி ஸ்ரீமுஷ்ணதே கேரியோன்
பருவஸ்ரீ பூவராகன்ன"

என்று தொடங்கும்பாட்டு (நரஹரி தாஸர்)

"கடியல்லி கரவிட்டனு பூவராகனு"

என்று தொடங்கும் பாட்டு (புரந்தர தாஸர்)

"தேவி அம்புஜவல்லி ரமணன
பூவராக தயாநிதே"

என்று தொடங்கும் பாட்டு (கோபால விட்டல தாஸர்)

## கிள்ளை உப்பு வெங்கட்ராயரைப்பற்றி கிள்ளையில் வெகுகாலமாய் பாடப்படும் காமண்டிப் பாட்டில் உள்ள பகுதி:—

கிள்ளைக் கிராமத்தில் வழக்கமாய் பாடப்படும் காமண்டிப் பாட்டின் தொடக்கத்தில் கிள்ளை உப்பு வெங்கட்ராயர் மாசிமகத்தின் சிறப்பைப்பற்றிய அடிகள் பாடப்பட்டு வருகிறது. அவ்வடிகள் பின்வருமாறு:—

பகரும் கிள்ளைத் தைக்கால் நகர் தன்னிலே
பண்பான மஸ்தான் சாஹிப்பு
பள்ளிவாசல் தெரு பாலகர்கள் தூசி மக்கள்
பாடாது காண் மானுகளே பாவலர்கள் இச்சமுகம்
பார்க்க வந்தோர் தங்களுக்கு
பண்பான சித்திரமுடன்
பாடுகிறேன் என்னுவில் பண்புடன் நீயிருந்து
பாக்கிய விஞயகனே பலகாலும் நான் மறவேன்

தில்லைக்கு கீழ்புரமாய் மதம் பொழிந்த நிலமாம்
செந்நெல் விளையும் கிள்ளை நகர் தனிலே
மாசிப் பருவத்தில் உப்பு வெங்கட்ராயரால்
பூவராகர் மகாமகங்கள் நடக்கிறதும்
தில்லைக் கோவிந்தராயர் திருக்கண் மகிழ்கிறதும்
சங்கரலிங்கம் தீர்த்தம் ஆடுகிறதும்
மா மறையோர் வீதியெல்லாம் மகக் கடைகள்
[விற்கிறதும்
பூவராக சுவாமிக்கு வாணவேடிக்கை யாகிறதும்''

இப்பாடல் வெகுகாலந்தொட்டு இன்றைக்கும் பாடப்பட்டு வருகிறது. [ஆதாரம் தைக்கால் ஆறுமுகப் பூசி குமாரர் சாமிக்கண்ணு பூசியிடம் உள்ள ஓலைச்சுவடியில் 17ம் பக்கத்தில் இருந்து மேற்படியார் அனுமதியுடன் எடுத்து எழுதப் பட்டது.]

## அனுபந்தம்—III

**எலத்தூர் பிரம்மஸ்ரீ சேது மாதவாசாரியார் அவர்களால் கிள்ளைக்கு ஸ்ரீ பூவராகப் பெருமான் எழுந்தருளுவதைப் பற்றிய கன்னட சாகித்தியம்:-**

சீர்காழி தாலுக்கா எலத்தூர் வேதகர்ப்பப் பரம்பரையினரால் மாசி மக தினத்தன்று கிள்ளையில் "பானக பூஜை" நடைபெற்று வந்தது. இப்போது இல்லை இதன் சிறப்பைப்பற்றியும் உப்பு வெங்கட்ராயர் தர்மத்தின் சிறப்பைப்பற்றியும் ஷியூர் வாசியும், மஹா ஞாதாவுமான ஸ்ரீ சேது மாதவாசாரியார் அவர்களால் கன்னட பாஷையில் கிள்ளை மாசி மகத்தைப்பற்றி ஒரு சாஹித்யம் இயற்றப்பட்டிருக்கிறது.

சீர்காழி தாலுக்கா அனுமந்தபுரம், கிருஷ்ணய்யர் வகையருவினால் மாசி மகத்தன்று ஸ்ரீ பூவராஹஸ்வாமிக்கு சந்தனபிஷேகம் ஆனதும் வெகுகாலமாய் வெட்டிவேர் சாத்தப்படுகிறது. இக் கைங்கர்யத்தையும் எலத்தூர் பிரம்மஸ்ரீ சேது மாதவாசாரியார் அவர்களால் அவரது சாஹித்தியத்தில் பாடப்பட்டுள்ளது.

"கிள்ளைய பருவோ சப்பிரமனோடு கோல தேவன
லலநெ நிருப்பர கூடிதிவ்ய பல்லக்கி வளகே
பொளயுதா (கிள்ளைய)

1) டங்க பேரி துந்துபி தம்பூரு ஷங்கா வீணே
ம்ருதங்க
பாங்க ஸ்வர்ண சஞ்சுகனதி சங்கியை இல்லாத
ஜனா கூடி (கிள்ளைய)

2) சம்மந்த பஞ்சக க்ஷேத்ர காகி ஸ்ரீமந்த
கிருஷ்ண பந்த தெரதி
ஸ்ரீமந்த பூஜைய கைய கொண்டு சுமந்திர
வேத கோஷ திந்த (கிள்ளைய)

3) பந்து தேஜிய நேரி பூர்வ சிந்து வீகே
பொராடுவாக
இந்து ஸந்நிப ஸ்வேத சத்ர த்வதந்திந்த
விராஜமான (கிள்ளைய)

4) பக்த சேது மாதவ தந்த ப்ரதகு பானக பலா
பூகாந்த ஸ்வீகரிசி பூஸுர ததிகே திருப்தி
படுசுதா (கிள்ளைய)

5) பாலு ததி மது க்ருத பல சந்தனபிஷேக
கேரல தேவ க்ருஷ்ணய்ய தந்த மாலெ தவன
பாராவையிப (கிள்ளைய)

6) தாஸ வெங்கட்ராய மாள்ப ராசி பக்ஷ பாயாசன்ன
ஸ்ரீஸ தாணுண்டு பூஸுர ஸாஸிர
பூஸுரகிப்ப (கிள்ளைய)

7) கிள்ளைய பருவ விஜய ஹயக்ரீவ ராத்ரி
விஜய மாடுவ ஸ்ரீ முஷ்ணக்கே (கிள்ளைய)

8) நிஜ பாண வேடிக்கை யிந்த
பூஜைய ஹருஷ படிசுதா (கிள்ளைய)

# பிழை திருத்தம்

| இன்னதற்கு | படிக்கவும் | பக்கம் |
|---|---|---|
| மனைவி | சகோதரி | 4 |
| நீர்த்த | தீர்த்த | 14 |
| அனைவரதம் | அனவரதம் | 17 |
| வெற்றிநேர் | வென்றிநேர் | அனுபந்தம் 1 பக்கம் |